[2017 ஜனவரி 27

வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

5—

பொறியியல் கல்லூரி

***6789—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனையில் பொறியியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தொகுதி, திருவாடனையில் பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாடனை தொகுதி, திருவாடனையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மூலமாக கலைக் கல்லூரி துவங்கப்பட்டு, மாணவ மாணவியர்கள் செவ்வனே பயின்று வருகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடனை தொகுதியானது ஒரு பெரிய தொகுதி மட்டுமல்ல, பொருளாதாரத்தில் மிகவும் பிற்பட்ட மக்களை உள்ளடக்கியதாக உள்ளது. இப்பகுதியிலுள்ள ஏழையெளிய மாணவ, மாணவிகள் 48 கிலோ மீட்டர் தூரம்

2017 ஜனவரி 27]

சென்றுதான் பல்வகைத் தொழில்நுட்பக் கல்வி பயில வேண்டியுள்ளது. எனவே, மாணவ, மாணவிகளின் நலன் கருதி, பிற்பட்ட பகுதியான திருவாடனையில் பொறியியல் கல்லூரிக்குப் பதிலாக அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை எனது சார்பாகவும், எனது திருவாடனை தொகுதி மக்கள் சார்பாகவும், முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும், தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், புல்லங்குடியில் ஏற்கெனவே ஓர் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், மூன்று சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஆக மொத்தம், 4 பொறியியல் கல்லூரிகள் தற்போது இயங்கி வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அந்த 4 பொறியியல் கல்லூரிகளிலும் ஒதுக்கப்பட்ட இடங்களில் மாணவர்களின் சேர்க்கை சதவிகிதத்தைப் பார்த்தால், மிகவும் குறைவாக இருக்கிறது. அண்ணா பல்கலைக்கழக பொறியியல் உறுப்புக் கல்லூரிகளைப் பார்க்கின்றபோது 420 இடங்களுக்கு 258 இடங்களில் சேர்க்கை நடைபெற்றிருக்கின்றது. மீதம் 132 இடங்கள் காலியாக உள்ளன. அதேபோல் சுயநிதி பொறியியல் கல்லூரிகளைப் பார்க்கின்றபோது ஒட்டுமொத்தமாக 1,945 இடங்களில் 1,239 இடங்களுக்கு சேர்க்கை நடைபெற்று, 706 இடங்கள் காலியாக உள்ளன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருந்தால்தான், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: 2016–2017 ஆம் ஆண்டில் மொத்தம் 868 இடங்கள் காலியாக உள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் 2011 முதல் 2016 வரை, 5 ஆண்டுகளிலே தமிழகம் முழுவதும் புதியதாக 67 கல்லூரிகளைத் தொடங்கி வரலாறு படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே பார்க்கின்றபோது, 2012–2013–ல் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ஓர் உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கின்றது. 2013–2014–ல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டியதைப்போல், அந்த ஓராண்டில் மட்டும், இராமநாதபுரம் மாவட்ட மாணவ, மாணவியர்களுடைய தேவைகளைக் கண்டறிந்து, மூன்று இடங்களில் புதியதாக கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளைத் தொடங்கிய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) கடலாடியில் ஒன்று, முதுகுளத்தூரில் ஒன்று மற்றும் அவர் சார்ந்திருக்கக்கூடிய திருவாடனை தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த மாவட்ட மாணவர்களுடைய தேவைகளை அறிந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5 ஆண்டு காலத்தில் மட்டும் 4 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கி இருக்கின்றார்கள். மேலும், இப்போதுள்ள மாணவர்களுடைய தேவைகளைக் கண்டறிந்ததில், பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி தேவை என்று கேட்டிருக்கின்றார்கள். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டுசெல்லப்பட்டு, அந்த மாணவர்களுடைய தேவைக்கேற்ப அங்கே பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி தேவையென்றால், அதை நிறுவுவதற்கு உண்டான முயற்சியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி சட்டப்பேரவை தொகுதி முழுக்க முழுக்க

2017 ஜனவரி 27]

கிராமப்புற மக்கள் நிறைந்திருக்கக்கூடிய தொகுதியாகும். அங்கே அரசின் சார்பில், அரசு கலைக் கல்லூரியோ, அரசு பொறியியல் கல்லூரியோ அல்லது அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரியோ இதுவரை இல்லை. எனவே, மாணவர்களுடைய தேவைகளை உணர்ந்து, குறிப்பாக பெண்கள் உயர் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 2011 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்போது துணை முதல்வராக இருந்தபோது, இந்த அவையிலே திருச்சுழியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகச் செயல்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் அந்தக் கல்வியாண்டில் என்ன காரணத்தினாலோ அந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டு, இதுவரை துவங்கப்படவில்லை. எனவே, இந்த அரசு அருள்கூர்ந்து அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால் அந்த அறிவிப்பிற்குப் பிறகு அரசாணையெல்லாம் வெளியிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அருள்கூர்ந்து அரசு அதை மறுபரிசீலனை செய்து, அந்த அரசாணைக்கு உயிரூட்டி, திருச்சுழியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்குவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்ட கல்லூரிகளாக இருந்தாலும், அதற்குத் தேவையான இடங்கள் தேர்வு செய்யப்படாமல் விடுபட்டிருந்ததற்கெல்லாம் முழுமையாக இடங்களைத் தேர்வு செய்து, அந்த இடங்களுக்கு உண்டான கட்டட வசதிகளைக் கொடுத்து, அந்த மாணவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே செயல்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைக் கண்டறிந்து, அதனுடைய தேவைக்கு ஏற்ப அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.*

[2017 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து வந்த மகராசி, மாணவர் சமுதாயத்திற்கு மகத்தான பல நல்ல திட்டங்களை வாரி வழங்கிய அன்புத் தாய், ஆராதனைக்குரிய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நினைவைப் போற்றி வணங்குகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகளின் காரணமாக இந்திய துணைக் கண்டத்திலே, தமிழகத்திலே உயர் கல்வியிலே அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் இருக்கின்ற நமது மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் சேலம் மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரிகள், மகளிர் மற்றும் மகளிர் ஆடவர் கலந்து இரு கலைக் கல்லூரிகள் மட்டுமே இருக்கின்றன. வளர்ந்து வருகின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணமாக இருப்பதனால், சுற்றுப் பகுதியில் இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் கல்வி பயில ஏதுவாக, மீண்டும் ஓர் அரசு கலைக் கல்லூரியை சேலம் மாவட்டம் மற்றும் ஆத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் ஏதாவது ஒரு இடத்தில் அமைக்க அரசு முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது கிராமப்புறத்தில் இருக்கின்ற மாணாக்கர்களுக்கும் உயர் கல்வியைத் தர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கடந்த 5 ஆண்டு காலத்தில் 67 கல்லூரிகளைத் தொடங்கியதோடு மட்டுமல்லாமல், 2016–ல் புதியதாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு பார்த்தோம் என்றால், கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், அதேபோன்று காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், தாங்கள் சார்ந்திருக்கின்ற அவினாசி தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் அறிவித்து அந்த மாணவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி

2017 ஜனவரி 27]

செய்கின்ற வகையில் இன்றைக்கு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதியில் தேவையின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

6—

சிறு தானிய சத்துணவு

***663—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களிலுள்ள குழந்தைகளுக்கு குதிரைவாலி, சாமை, தினை போன்ற சிறு தானிய உணவுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இமயத்துப் புகழே, இயக்கத்தின் இமையே, இரக்கத்தின் வடிவே, ஈடில்லா வளமே, தமிழக மக்களின் துயர் துடைத்து, இன்று வங்கக் கடலின் மடியில் துயில் கொண்டிருக்கும் எங்கள் தங்கத்தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, என் விடையைத் தொடங்குகிறேன்.*

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*